www.tamilarangam.net



புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின்
பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது. எனவே
கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி,
எமது கடலில் எதிரி வைத்திருக்கும்
கடலாதிக்கத்தைத் தகர்த்து, எமது கடலில் நாம் பலம்
பெறும்போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை
நிரந்தரமாக நிலைநிறுத்திக்கொள்வதுடன்,
தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும்
எதிரிப்படையையும் விரட்டியடிக்க முடியும்.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*
*வே. பிரபாகரன்*

வெளியீடு: தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கடற்புலிகள் 98

தமிழர் கடற் போரணியைப் பலப்படுத்துவோம்

SEA TIGERS
OF LIBERATION TIGERS

**16.08.97 - 15.12.97**

www.tamilarangam.net



தமிழர் விடுதலைப் போரின் வெற்றிக்கான பாதை தமிழர் தம் கடற்பரப்பை முழுமையாக தமது கைகளுக்குள் வைத்திருப்பதில் தங்கியுள்ளது. எமது கடலை வெற்றிகொள்ளும் முழுமையான பலத்தை நாம் அடையும்போதுதான் அது எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் சிங்களத் தரைப்படைகளை எம்மிடம் சரணடைய வைக்கும். எதிரியின் அடக்குமுறைக்கான பலம் இதன் மூலம் சிதறடிக்கப்படும். இத்தகைய போர்த் தேவையின் அடிப்படையில் தமிழர் தம் கடற்போரணியான கடற் புலிகளை பலப்படுத்த வேண்டும். கடற்புலிகளின் முழுமையான வளர்ச்சியானது, எதிரிப்படைகளை நாம் வெற்றி கொண்டு எம் மண்ணை நாம் மீட்டெடுக்க வழிசமைக்கும்.

## இவ் அளப்பரிய போர்ப்பணிக்கு உங்களைக் கூவி அழைக்கின்றோம்

**அன்புள்ள மக்களே!**

நீலக்கடல் எங்கும் உயிரைக் கொடுத்து எம் தேசத்துக் கரைகளை பாதுகாக்கும் கடற்புலிகளை நவீனமயப்படுத்தும் 'கடற்புலிகள் 98' போர் நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் கடற் பரப்பை வெற்றிகொள்ள உழைப்பைத் தாருங்கள். நீங்கள் போராடும் – துன்பங்கள் சுமந்து விடிவிற்காக உயிர் கொடுக்கும் – தலைமுறையில் வாழ்பவர்கள். அந்த உன்னத தியாகத்தின் ஒரு துளியை மனதில் தாங்கி இப் போர்ப் பணிக்கு பங்களியுங்கள்.